# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

## பொலிஸ் திணைக்களத்திற்கு பொலிஸ் கொஸ்தாபல்/பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2008.04.11 ஆந் திகதிய 1545 ஆம் இலக்கங்கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்பானது. மேலும் 1571 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பிரசுரமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2008.12.31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வி சம்பந்தமாக மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது :-

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி/ பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

***கல்வி தகைமைகள்.***-க. பொ. த. (சா.த.) ப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியடைந்தவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பொலிஸ்மா அதிபர்.

11-554/1

---

திருத்தம்

## பொலிஸ் திணைக்களத்திற்கு பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு ஆட்சேர்த்தல் (விசேட அதிரடிப்படை)

மேற்போந்த பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2007.12.28 ஆந் திகதிய 1530 ஆம் இலக்கங்கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்பானது. 1571 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பிரசுரமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2008.12.31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வி சம்பந்தமாக மறு பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி

கல்வி தகைமைகள்.-க. பொ. த. (சா.த.) ப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியடைந்தவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பொலிஸ்மா அதிபர்.

11-554/2

---

## நீதிச் சேவை ஆணைக்குழு

இலங்கை உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் பதவி

1.இலங்கை உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

3. மாதாந்த சம்பள அளவுத் திட்டம் : ரூ. 34,915 - 1×790 - 17×1,050 - ரூபா 53,555.

4. **வயது**.- விண்ணப்ப முடிவுத் திகதியின் போது 30 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரச/கூட்டுத்தாபன சேவையில் சேவையாற்றும் அலுவலர்களிற்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று).

5. ***தகைமைகள்.***-இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்ற பதிவாளர்-உயர் நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு தகைமை பெற்றவராவார். அவர்-

(அ) இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளராக அல்லது இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளராக, அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும் இருப்பின்,

அல்லது

(ஆ) (i) பத்து வருடங்களுக்குக் குறையாமல் செயற்பாட்டு திறமையுடையவராகவும், தொழிலில் ஈடுபட்டிருக்கும் சட்டத்தரணி ஒருவராகவும் இருத்தல்.

(ii) ஆணைக்குழுவினால் குறித்தொதுக்கப்படத்தக்கதாய அத்த கைய திகதியொன்றில் 35 வருடங்களுக்குக் குறையாத, அத்துடன் 40 வருடங்களுக்கு மேற்படாத வயதுடையவர்கள் ஆகவும் இருத்தல்.

**குறிப்பு**:- ஏதாவது அமைச்சு, அரசாங்க திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் பதவி நிலைத்தரத்தில் சட்டத்தரணியாக அல்லது சட்டக்கல்லூரியில் சட்ட விரிவுரையாளராக சேவையாற்றிய காலப் பகுதி விண்ணப்பதாரியின் மேற்படி (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுப் பொருட்டு செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்ட காலப்பகுதியாகக் கருதப்படும்.

06. விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் -

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) அதிசிறந்த குணநலனுடையவராக இருத்தல் வேண்டும்.

07. விண்ணப்பகாரர் தேவைப்படுமிடத்து பின்வரும் ஆவணங்களில் ஒன்றையேனும் அல்லது அனைத்தையும் சமர்ப்பிக்கத் தயாராகவிருத்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) உச்ச கல்வித் தகைமைச் சான்றிதழ் ;
(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ் ;
(ஈ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலத்தில் சித்தி பெற்ற உச்ச தகைமைச் சான்றிதழ்.

8. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து, பூர்த்தி செய்யப்பட்ட அவர்களது விண்ணப்பத்தினை "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, கொழும்பு 12" என்ற முகவரிக்கு 2008.12.31 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

